# Shadows Embedded in the History of Tamizhan + Musalpani = Thekimolakkal (Eelam Tamils)

**S. Mahendran**
*Full-Time Ph.D. Research Scholar, (Registration No: 23211284021012)*
*St. Veeramamunivar Research Centre, Department of Tamil*
*St. Xavier's College (Autonomous), Palayamkottai*
*Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli*

**Dr. Shamilajoster**
*Assistant Professor, Department of Tamil*
*St. Xavier's College (Autonomous), Palayamkottai*
*Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17255959

**Abstract**

*No matter how many eras pass, the cries of Tamil kin who perished in Eelam, and the ruins caused by the explosions of bombs, continue to echo constantly in our stream of thought. In this context, the battle between the Liberation Tigers of Tamil Eelam (LTTE) and the Sri Lankan Army reached its peak in 2009. Since the eruption of the Eelam struggle, indiscriminate bombings from aircraft and direct attacks with artillery shells killed countless people. Consequently, the identities of the Eelam Tamils were reduced to ashes. The tragedies of the Eelam people, the erasure of their identities, and the atrocities inflicted upon them are brought out through the two novels Shadows Embedded in History and Musalpani. This paper attempts to explore and present these aspects as portrayed in the novels.*

***Keywords:*** *Tekimolas, Liberation Tigers of Tamil Eelam, History Presentation, Explosion*

**Footnotes**

1. Shadows Embedded in History – p. 2
2. Shadows Embedded in History – p. 7
3. Shadows Embedded in History – p. 58
4. Musalpani – p. 58
5. Jaffna: Society, Culture, Perspectives – p. 12
6. Shadows Embedded in History – p. 186
7. Eelam: An Endless Journey of Incomplete History – p. 132
8. Musalpani – p. 489
9. Eelam Liberation Struggle and Gandhism – p. 147
10. Social Events – p. 54

**References**

1. Tamizhan – Shadows Embedded in History – Publisher: Adayalam, 1205/1 Karuppur Road, Puthanatham – 621310, Trichy. First Edition: 2010.
2. Tamizhan – Musalpani – Publisher: Adayalam, 1205/1 Karuppur Road, Puthanatham – 621310, Trichy. First Edition: 2012.

3. Karthigesu Sivathamby – Jaffna: Society, Culture, Perspectives – Publisher: Kumaran Book House, 361/12 Dam Street, Colombo – 12. First Edition: Aavani, 2000.
4. Suryadeeban – Eelam Liberation Struggle and Gandhism – First Edition: 2009, Chozhan Publications, 5E Pon. Ambalam Road, K.K. Nagar, Chennai – 78.
5. S.M. Gopalrathinam – Eelam: An Endless Journey of Incomplete History – First Edition: December 2008, Thozhamai Publications, 5E Pon. Ambalam Road, K.K. Nagar, Chennai – 78.
6. Dr. Xavier Antony S.S. – Social Events – First Edition: 2006.

# தமிழவனின் சரித்திரத்தில் படிந்த நிழல்கள் + முஸல்பனி = தெகிமொலாக்கள்(ஈழத் தமிழர்கள்)

**சு. மகேந்திரன்**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
(பதிவு எண்:23211284021012), வீரமாமுனிவர் உயராய்வு மையம், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி

**முனைவர் தா. ஷமிலாஜோஸ்டர்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி

**ஆய்வுச்சுருக்கம்**

*எத்தனை யுகங்கள் கடப்பினும் ஈழத்தில் மடிந்து வீழ்ந்த தமிழ் உறவுகளின் கதறல் சத்தமும் எரியப்பட்ட குண்டு வெடிப்புகளின் சிதைவுகளும் நித்தம் நம் எண்ண ஓட்டத்தில் வந்து கொண்டுதான் இருக்கிறன. அந்த வகையில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை ராணுவத்திற்கும் இடையிலான சண்டை 2009-ம் ஆண்டு உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. இச் சண்டை என்பது ஈழப் போராட்டம் வெடித்த பின்பு வானூர்திகளிலிருந்து கண்மூடித்தனமாக குண்டுவீசுதல், எரிகணை வீசுதல் ஆகிய நேரடி தாக்குதலால் எண்ணற்ற மனிதர்கள் கொல்லப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக ஈழத்தமிழர்களின் அடையாளங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இத்தகைய ஈழமக்களின் துயரத்தையும், அவர்களின் அடையாள அழிப்புகளையும், அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் வரலாற்று பதிவுகளோடு தமிழவனின் சரித்திரத்தில் படிந்த நிழல்கள், முஸல்பனி இரு புதினங்களும் வெளிப்படுத்துகிறது. இப்புதினங்களை ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

இலங்கை ராணுவத்திற்கும் விடுதலை புலிகள் என்ற அமைப்புக்கும் இடையே **1983**-ஆம் ஆண்டு தொடங்கிய இலங்கை உள்நாட்டு போர், **2009**-ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. **26** ஆண்டுகள் நடந்த உள்நாட்டுப் போரில் எண்ணற்ற மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளன. இதன் விளைவாக ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் ஆயிரக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறினார். தமிழர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள பல்வேறு வழிகளில் வெளிநாடு களுக்கு தப்பித்து சென்றனர். இலட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கையை புரட்டிப் போட்டதாக இச்சம்பவம் மாறிப்போனது. இப்போர் ஏற்படுத்திய காயங்களை உலகில் பல்வேறு மூளைகளில் வாழும் இலங்கை தமிழ் மக்கள் இலக்கியங்களில் வெளிப்படுத்திக் கொண்டு இருக்கிறனர். அந்த வகையில் தமிழவனின் சரித்திரத்தில் படிந்த நிழல்கள், முஸல் பனி ஆகிய இரு புதினங்களும் இலங்கையில் நடைபெற்ற போர் சேதங்களையும், வடுக்களையும் வெளிப்படுத்துவதாகவும் பல்வேறு செய்திகளை உள்ளடக்கி செய்திகள் புனையப்பட்டிருக்கின்றன.

இவற்றை ஆராய்ந்து இலங்கை வாழ் ஈழத்தமிழ் மக்களின் துயரத்தை புதினத்தின் வழி வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சரித்திரத்தை எழுதிய தெகிமொலாக்கள் (ஈழத் தமிழர்கள்)

தெகிமொலா என்பது கற்பனையாக புனையபட்ட நாட்டின் பெயராக இல்லாமல் குறியீடாக பயன்படுத்தப்பட்ட ஒரு நாட்டில் உள்ள ஓர் இனத்தை குறிப்பதாக தமிழவனின் புதினத்தில் குறியீடாக கூறப்பட்டிருக்கிறது. அந்த வகையில் புதினத்தில் தெகிமொலா என்று கூறும் இனமானது இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்களையும் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் நாவல் ஆசிரியர் புனைவாக பிரதிபலிக்கிறார். இதனை

> **தெகிமொலா என்ற சொல் இவர்களை குறிக்கும் பல பெயர்களில் ஒன்று என்பது தான் உண்மை.**

என்ற வரிகளின் வாயிலாக ஈழத்தமிழர்களை மறைமுகமாக கூறுகின்றார்.

புனைவும் நிஜமும் வேறுபாடு இல்லாமல் எழுதப்பட்ட சரித்திரம் ஈழத்தமிழர்களை பற்றி எழுதப்பட்டிருக்கின்றன. இதனை தமிழவனின் சரித்திரத்தில் படிந்த நிழல்கள் என்ற புதினத்தில் இலங்கையில் ஈழதமிழர்களுக்கு ஏற்பட்ட சம்பவங்கள் நடந்த ஆண்டுகளைப் பற்றி ஆதாரங்கள் அடிப்படையிலும் யூகங்கள் அடிப்படையிலும் அறிபவர்களுக்கு சரித்திரம் தெளிவாக விளங்கும். அந்த வகையில் இலங்கையில் நடைபெற்ற போர் மக்களுக்கு கடும் துன்பத்தையும், பொருளாதார ரீதியாக இழப்பையும் ஏற்படுத்தி பல்லாயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்கும் காரணமாகின. அப்படிப்பட்ட ஈழத் தமிழர்களின் வரலாறு மக்கள் விரட்டப்பட்டது போன்று அவர்களின் வரலாறுகளும் அழிக்கப்பட்டு விடுமோ என்று தங்களுடைய சரித்திர நூல்களை எழுதினார்கள். இதனை எழுதப்பட்ட எல்லா நூல்களிலும் இவர்கள் தங்கள் சரித்திரத்தைப் பற்றியே மீண்டும் மீண்டும் எழுதினார்கள். அப்படி தாங்கள் சரித்திரத்தை எழுதி வைத்துவிட்டு இன்று ஒருவர் கூட இல்லாமல் மறைந்து போன அந்த துரதிஷ்டவசமான வம்சத்தின் பெயர் தான் தெகிமொலா.

ஈழத்தில் நடைபெற்ற போரில் நாட்டை விட்டு வெளியேறிய ஈழத்தமிழ் மக்களின் உணர்வுகளையும், உள்ள குமுறல்களையும் நாவல் பிரதிபலிக்கின்றன.

### இலங்கை ராணுவமும் விடுதலை புலியும்

இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள தனித் தீவுநாடாக விளங்கும் இலங்கை கலாச்சாரம் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக அறியப்படுகின்றது. இங்கு வாழ்ந்த ஈழத் தமிழர்கள் என்போர் இலங்கையில் வாழும் தமிழினத்தவர் எல்லோரையும் குறிக்காமல் இலங்கையின் வடபகுதியில் வாழும் தமிழர்களையே குறிப்பிடுகின்றது. இதனை

சிங்கள மக்கள் தான் பெரும்பான்மையாக வசிக்கும் இடங்களில் உள்ள தமிழர்களை கொண்டே கருத்தினை பெற்றுள்ளனர்.

சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் இடையிலான வரலாற்று இனங்களுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வுகளே விடுதலைப் புலிகள் என்னும் அமைப்பு உருவாகுவதற்கு காரணமாக அமைந்தது. பின்பு ராணுவ குழுவாக செயல்படும் அளவிற்கு புலிகள் என்ற பெயரில் வளர்ச்சி அடைந்து. தனிப்பட்ட இயக்கமாகவும் செயல்பட்டது. இந்த அமைப்புகள் அனைத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தலைமையிலான மையக் குழுவாக செயல்பட்டன. சரித்திரத்தில் படிந்த நிழல்கள் புதினத்தில் தமிழவன் குறியீடாக இலங்கை ராணுவத்தையும், விடுதலைப் புலியையும் பற்றி கூறியுள்ளார். அரசருக்கும்

நாட்டிற்கும் எதிராக செயல்பட்டவர்கள் மகுடதாரிகள் என்றும். இலங்கை ராணுவத்தை ரகசிய அமைப்பு மகுடதாரிகள் என்றும் மறைமுகமாக காட்டியுள்ளார். அந்த வகையில் இலங்கை நாட்டுடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது பச்சை ராஜனின் ஆட்சியும், நாடும் இலங்கை அரசுக்கு நிகராகவும். விடுதலை புலிகள் ரகசிய அமைப்பு கொண்ட மகுடதாரிகள் இயக்கமாகவும் குறியீடாகவும் காட்டியுள்ளதாக அறிய முடிகிறது. இந்த நிகழ்வினை தமிழவன்

மலை மீது ஒளியின் ரகசிய அமைப்பு மகுடதாதிகள், இவர்கள் எல்லாரும் ராஜனின் மகுடத்தை போல் மகுடம் அணிந்திருந்தால் இவர்களுக்கு மகடதாரிகள் என்று பெயர் வந்தது. என்ற வரிகள் மூலம் விடுதலைப் புலியையும், பிரபாகரனையும் குறியீடு மூலம் எடுத்தியம்புகின்றன.

**அக்கினியும் வரலாறு அளிப்பும்**

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது கல்வி அறிவே அவற்றின் ஒரு சாரமாக விளங்குவது நூலகங்களாகும். கல்வி வளர்ச்சியில் இவற்றின் பங்கு என்பது மகத்தானதாகவும் முதன்மை ஆதாரமாகவும் விளங்குகின்றது. நூலகங்களில் உள்ள பிரதிகளை கிழிப்பது, மடிப்பது மற்றும் பிரதிகள் சேதப்படும் விதமாக கையாளுதல் கூடாது என்பது பொதுவான விதி. இதன் அடிப்படையில் நாட்டை பாதுகாப்பது எப்படி ஒரு நல்ல குடிமகனின் கடமையோ அதேபோன்று நூலகங்களை பாதுகாப்பதும் ஒரு நல்ல குடிமகனின் கடமையாகும். இப்படியான நூலகம் ஒரு மொழியின் குறியீடாக மட்டும் இன்றி மொழி சார்ந்த இனத்தின் குறியீடு என்பது நிதர்சனமான உண்மை. ஓர் இனத்தை அழிப்பதற்கு முன்பு அந்த இனம் சார்ந்த குறியீடுகளை அழிப்பது என்பது முக்கியமான ஒன்றாக கருதி சிங்கள இனவெறியர்கள் அதனை ஆயுதமாக கையில் எடுத்தனர். அதன் அடிப்படையில் எழுந்த ஒன்றை யாழ் நூலகம் எரிப்பு ஆகும். சரித்திரத்தில் படிந்த நிழல்கள் என்ற புதினத்தில் புனைவில் காணப்படும் தெகிமொலாக்களின் நூலகம் எரிந்து சாம்பலாகிய நிகழ்வு என்பது இலங்கை தமிழர்களின் உண்மை நிகழ்வினை குறிப்பிடுகிறது.

எதிர்கால சம்பவங்கள் பலவற்றையும் ஏற்கனவே எழுதி வைக்கப்பட்ட பல புத்தகங்களும் கையெழுத்து பிரதிகளும் கொண்ட நூலகம் சூடேறியதால், புத்தகத் தாள்கள் ஒன்றோடு ஒன்று உரசி எழுந்த மிகப்பெரிய விபத்தில் பல நாடுகளிலும் புகழ்பெற்ற தெகிமொலா மொழி நூலகம் ஒன்று எரிந்து சாம்பலாகியது.

இப்புதினத்தில் தெகிமொலா என்பது ஓர் இனம். அந்த இனம் பேசக்கூடிய அந்த இனத்திற்கான தெகிமொலா மொழி என்பது மிகப்பெரிய குறியீடு. அப்படிப்பட்ட மொழியை வளர்த்தெடுத்த நூலகம் எரிந்து சாம்பலாகியது என்பது மாபெரும் குறியீடு. இதனை இலங்கையில் நடைபெற்ற ஈழத் தமிழ் மக்களின் இனப் பிரச்சனையோடு இணைத்துப் பார்க்கும்போது பெரும் அரசியலை கூறுவதாக அமைகிறது.

**வெடிப்பும் அதன் பிரதிபலிப்பும்**

இரு நாடுகளுக்கு இடையே பகை உண்டாகி மோதல் ஏற்படும் பொழுது வன்முறையை கையாளுகின்றனர். அதன் விளைவாக அதிநவீன குண்டுகளை வீசி எதிரி நாட்டினை அழிப்பார்கள். இலங்கையிலும் சிங்கள அரசானது இம்முறையே கையாண்டது. கலவரங்களை ஏற்படுத்தியும், குண்டுகளை வீசியும், எரிகளை வீசியும் நேரடியாக சுட்டும், சித்திரவதை செய்தும் ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதலை மேற்கொண்டனர். இதனை

ஓடிவந்தகூட்டம்எங்கள் எதிர் வீட்டில் மீது எதையோ எரிந்து கூரையில் விழுந்த சத்தம் கேட்டது. பின் அது உருண்டு நெருப்புடன் கீழே விழுந்தது அது கீழே

விழுந்ததால் தொடர்ந்து மற்றொன்று அதே கூரை மீது வீசப்பட்டது.

எரி குண்டுகள் வீசிதாக்குதல் ஏற்படுத்தியதை இவ்வரிகள் விவரிக்கின்றன.

இலங்கை ஈழத் தமிழர்களின் மீதான தாக்குதலில் துப்பாக்கியால் சுட்டதை விட குண்டுகளை போட்டுக் கொன்றது தான் அதிகம். எங்கிருந்து எப்பொழுது குண்டுகள் போடுவார்கள் என்று தெரியாத நிலையில் மக்கள் இருந்தார்கள். எதிர்பார்க்காத சூழலில் குண்டுகளை வீசி மக்களை கொன்றனர். இதனால் எல்லா பக்கங்களிலும் குண்டுகளின் வெடிப்பும், முழக்கமும் புகை மண்டலமுமாகக் காட்சியளித்தது. இவ்வுண்மை நிலையை தமிழவனின் முஸல்பனி புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

பூதமா, பேயா என்று தெரியாமல் வேகமாய் மெது மெதுவாய் பரவிய வெள்ளைப் புகை வானத்திலும் கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் பரவிய போது இன்னும் சில குண்டுகள் வானத்திலிருந்து வெடித்தன.

இவ்வாறு குண்டுவெடிப்பின் போது ஏற்பட்ட நிகழ்வினை பிரதிபலிக்கும் விதமாக வெளிப்படுத்துகின்றன. குறிப்பிட்ட இனத்தை மையமாக வைத்தே தாக்குதலை நடத்தி இருப்பதும் அறிய முடிகிறது.

## யுத்தமும் அதன் வெளிப்பாடும்

ஈழத் தமிழர்களின் வாழ்நிலத்தில் இலங்கை ராணுவத்தினர் தொடங்கிய பூத நடவடிக்கை மக்கள் மத்தியில் ஆறாத வடுக்களை ஏற்படுத்தியது. அந்த வகையில் சிங்களர்களின் அதிகாரம் ஈழத் தமிழர்களுக்கு அழிவை தருவதாக அமைந்துள்ளது. இதனை

**இது எவருடைய உலகு?**
**அரச பயங்கரவாதிகளின் உலகு**
**இது என்ன காலம்?**
**ஈழத்தமிழர்களின் இளவு காலம்.**
**- (கலைஞர் கருணாநிதி)**

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன.

மன்னிக்க வேண்டும் நீக்ரோகளுக்கு இங்கு இடம் இல்லை. வெள்ளையர்களுக்கு மட்டுமே அனுமதி. என்ற வரிகளும் ஓர் இனத்தை மையமிட்டு இனவெறியல் பிளவுபடுவதை பிரதிபலிக்கின்றது. இலங்கை ராணுவத்தினர் பெண்களை இலக்கு வைத்தே அதிக தாக்குதல்களை நடத்தினார்கள். இது பெண்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது. இதில் முதலுதவி பயிற்சிக்காக சென்ற 61 பெண்களையும் இலங்கை ஆட்சியாளர்கள் சிறுவர் விடுதலைப்புலிகள் என்று கொன்று விட்டனர். அவர்களை பொறுத்தவரை அப்பாவி பெண்களின் ஆடைகளை களைவது, நிர்வாணமாக நிற்க வைப்பது, முகங்களை சிதைப்பது, பாலியல் வன்முறை செய்து கொள்வது, போன்றவை ஒரு செயல்பாடு அல்ல அதற்கு மாறாக சித்திரவதை செய்வதை நோக்கமாகக் கொண்டனர். இந்த நிகழ்வினை தன்னுடைய முஸல்பனி என்னும் புதினத்தில் தமிழவன்

யுத்தத்தில் ஆயுள் ஆறாமல் செத்துப் போன பெயர் இல்லா ஜீவன்கள் குழந்தைகளாகவும் அல்லது பெண்களாகவும் அல்லது வயிற்றிலிருந்து வெளியே வராத தசைப்பிண்டங்களாகவும் சிதறிகிடந்தன. என்ற வரிகள் மறைமுகமாக இலங்கையில் நடந்த வன்முறையுத்தத்தையும் ஈழ பெண்களுக்கு நேர்ந்த கொடுமைகளையும் எடுத்துறைக்கிறது.

## முடிவுரை

எழுத்தாளர் தமிழவன் புதிய புதிய உத்தி முறைகளை கையாண்டு இருக்கிறார். அந்த வகையில் உலக அளவில் உள்ள அரசியலான நம் மண்ணோடு சேர்ந்த இன அரசியலான இலங்கை அரசியலை கூறுகிறார். ஈழத்தமிழ் இனத்தின் மீதான இலங்கை அரசின் போர்களையும், இனப்படு கொலையையும், இன அழிப்பையும், குறிப்பிடுவதை காண முடிகிறது. குறிப்பிட்ட ஓர் இனமான தமிழர்கள் சிறுபான்மையாக இருப்பதால்

பெரும்பான்மை வகிக்கிற சிங்களர்களால் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள் என்பதை சரித்திரத்தில் படிந்த நிழல்கள் மற்றும் முஸல்பனி ஆகிய இரு புதினங்களும் பிரதிபலிக்கின்றன. அடையாள விரும்பிகள் எல்லாவட்டத்திலும் இருக்கிறார்கள். அந்த விதத்தில் பார்த்தோமானால் யாழ் நூலகம் ஒரு அடையாளமாக திகழ்கின்றன. அவற்றை சீர்குலைக்கும் விதமாக தீயிக்கு இறையானதை பார்க்க முடிகின்றது. அதை தொடர்ந்து புலம்பெயர் வாழ்வு என்பது சிங்களரால் வாழ்வும் உயிரும் உரியப்பட்டு விரட்டப்பட்டவர்கள் என்பதால் மட்டுமே புலம்பெயர் வாழ்வு கிடைத்திருக்கின்றனர். அந்த கணத்தில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் மட்டுமல்ல தமிழ் என்ற மொழி பிரதேசத்தில் வாழ்பவர்கள் என்ற முறையில் அவர்களை நாடற்றவர்களாகவும், நிலமற்றவர்களாகவும், ஒரு அகதியாகவும் உணர்கின்ற சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## அடிக்குறிப்பு

1. சரித்திரத்தில் படிந்த நிழல்கள் - பக்கம்: 7
2. சரித்திரத்தில்படிந்தநிழல்கள் - பக்கம்:7
3. சரித்திரத்தில் படிந்த நிழல்கள் - பக்கம்:58
4. முஸல்பனி - பக்கம்:58
5. யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்து நிலை - பக்கம்:12
6. சரித்திரத்தில் படிந்த நிழல்கள் - பக்கம்:186
7. ஈழம் முடிவில்லா பயணத்தில் முடியாத வரலாறு - பக்கம்:132
8. முஸல்பனி - பக்கம்:48
9. ஈழ விடுதலைப் போராட்டமும் காந்தியமும் - பக்கம்:147
10. சமூக நிகழ்வுகள் - பக்கம்:54

## துணைநூற்பட்டியல்


1. தமிழவன் - சரித்திரத்தில் படிந்த நிழல்கள் - வெளியீடு: அடையாளம், 1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, திருச்சி. முதல் பதிப்பு: 2010
2. தமிழவன் - முஸல்பனி - வெளியீடு: அடையாளம், 1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, திருச்சி. முதல் பதிப்பு: 2012
3. கார்த்திகேசு சிவத்தம்பி - யாழ்ப்பாணம் சமூகம், பண்பாடு, கருத்து நிலை - வெளியீடு: குமரன் புத்தகம் இல்லம் 361-ட, டாம் வீதி, கொழும்பு -12. முதல் பதிப்பு: ஆவணி 2000.
4. சூரியதீபன் - ஈழ விடுதலைப் போராட்டமும் காந்தியும் - முதல் பதிப்பு: 2009, சோழன் படைப்பகம் 5D, பொன்னம்பலம் சாலை, கே.கே. நகர், சென்னை -78.
5. எஸ்.எம். கோபாலரத்தினம் - ஈழ முடிவில்லாத பயணத்தில் முடியாத வரலாறு - முதல் பதிப்பு: டிசம்பர் 2008, தோழமை வெளியீடு5D, பொன்னம்பலம் சாலை, கே.கே. நகர், சென்னை -78.
6. முனைவர் சேவியர் அந்தோணி சே.ச. - சமூக நிகழ்வுகள் - First Edition:2006, Vaigarai Publishing House, Main. Road, Dindigul & 624 001, Phone No. 0451 &2430 464,2435 062.